A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN


4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 19 / 2023</u>**

திரு. கோ. வெங்கடேசன்,
புதிய எண்.125 சி/1, மலைத்தெரு,
ஆலப்பாக்கம் கிராமம், செங்கல்பட்டு – 603 002.

………மேல்முறையீட்டாளர்
(திரு. கோ. வெங்கடேசன்
Rep by திரு அர. ஏழுமலை)

எதிர்

1. உதவி மின் பொறியாளர்/செங்கல்பட்டு/தெற்கு,
செங்கல்பட்டு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
B-39, அலகேசன் நகர், செங்கல்பட்டு – 603 002.

2. செயற்பொறியாளர்/ இ&ப/ செங்கல்பட்டு,
செங்கல்பட்டு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண் 130, GST ரோடு, செங்கல்பட்டு – 603 001.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு S.மோகன், செயற்பொறியாளர்/ இ&ப/ செங்கல்பட்டு (i/c)
திரு R. சோமசுந்தரமூர்த்தி, இளநிலை பொறியாளர்/ தெற்கு)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 24-02-2023</u>**

**<u>கேட்புரை நாள்: 10-05-2023</u>**

**<u>ஆணை நாள்: 16-05-2023</u>**

24.02.2023 அன்று பெறப்பட்ட திரு. கோ. வெங்கடேசன், புதிய எண்.125 சி/1, மலைத்தெரு, ஆலப்பாக்கம் கிராமம், செங்கல்பட்டு – 603 002 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 19/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 10.05.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள்

ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

புதிய எண் 125 சி/1 எண், மலைத்தெரு, ஆலப்பாக்கம் கிராமம், செங்கல்பட்டு முகவரிக்கு மின் இணைப்பு கோரியும், தனது விண்ணப்பத்திற்கு பதில் வழங்கிடாததால் உரிய நிவாரணம் வேண்டியும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 புதிய எண் 125 சி/1 எண், மலைத்தெரு, ஆலப்பாக்கம் கிராமம், செங்கல்பட்டு முகவரியில் அமைந்துள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி இணைதளம் மூலம் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 இணையதளம் மூலம் பெறப்பட்ட விண்ணப்பத்தில் ஆவணங்கள் பதிவேற்றம் செய்யப்படவில்லை என்பதால் விண்ணப்பம் hold செய்யப்பட்டு மேல்முறையீட்டாளருக்கு குறுஞ்செய்தி மூலம் தகவல் தெரிவித்ததாகவும், தகவல் தெரிவித்து 30 நாட்கள் கடந்த நிலையிலும் மனுதாரரிடமிருந்து எவ்வித தகவலும் கிடைக்க பெறாததால் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, தனது வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 25.10.2022 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம் 12.12.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு :**

3.1 செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 12.12.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*
*As per the para in findings, the petitioner should submit the No Objection Certificate obtained from the concerned officer of the Government of Tamil Nadu "As per the TNERC Distribution Code 27(12) for getting new service connection in poramboke land, and hence the petition closed."*

4.0 **மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை**:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 10.05.2023 அன்று நேரில் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. கோ. வெங்கடேசன் மற்றும் அவருடைய பிரதிநிதி திரு அர. ஏழுமலை ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு S.மோகன், செயற்பொறியாளர்/ இ&ப/ செங்கல்பட்டு (i/c) மற்றும் திரு R. சோமசுந்தரமூர்த்தி, இளநிலை பொறியாளர்/ தெற்கு, செங்கல்பட்டு மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **மேல்முறையீட்டாளரின் வாதங்கள்**:

5.1 திரு. கோ.வெங்கடேசன், த.பெ கோவிந்தன் என்கிற கோவிந்தப்பன் புதிய எண் 125 சி/1 எண், மலைத்தெரு, ஆலப்பாக்கம் கிராமம், செங்கல்பட்டு முகவரிக்கு மின்

இணைப்பு கோரி விண்ணப்பித்த பதிவு எண் 200095150422314 நாள் 15.4.2022 என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மேற்கூறிய விண்ணப்பத்தினை பெற்ற பொறியாளர் 21.4.2022 அன்று இடத்தினை பார்வையிட்டதாகவும், விண்ணப்பதாரர் மின் இணைப்பு விண்ணப்பம் குறித்து இணையதள பட்டியலினை சென்ற 17.05.2022–இல் பார்வையிட்ட போது 23.04.2022–இல் "Application put on hold for attending the defects in application or documents. Reason: Documents not uploaded" என்றும் எந்த ஆவணம் இணைக்கப்பட வேண்டும் என குறிப்பிடவில்லை எனவும், உடல் நலக் குறைவால் பொறியாளரை சந்திக்க இயலவில்லை எனவும், பிறகு நேரில் பலமுறை சென்றும் பொறியாளரை காணமுடியவில்லை என்பது உண்மை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மேல்முறையீட்டாளர் விண்ணப்பப் படிவத்தோடு கூடுதலாக இணைக்கப்பட வேண்டிய ஆவணங்களின் விவரம் கேட்டு பொறியாளருக்கு 30.9.2022 அன்று பதிவு தபால் அனுப்பப்பட்டு அந்த தபால் 01.10.2022 அன்று பெறப்பட்டும், பொறியாளரிடமிருந்து எந்த பதிலும் அளிக்கப்படவில்லை எனவும், பொறியாளர் பதில் அளிக்காததற்கு உரிய நடவடிக்கையும் உத்தரவும் இதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 திரு. கோ.வெங்கடேசன், த.பெ கோவிந்தன் என்கிற கோவிந்தப்பன் அவர்கள் கடந்த 15.4.2022 அன்று புதிய வீட்டு மின் இணைப்பு கேட்டு அண்ணாநகர் பிரிவிற்கு online விண்ணப்ப எண் 200095150422314 மூலம் விண்ணப்பித்திருந்ததாகவும், அந்த விண்ணப்பம் அண்ணா நகர் பிரிவிலிருந்து online மூலம் கடந்த 20.4.2022 அன்று ஊரகம்/தெற்கு/செங்கல்பட்டு பிரிவில் கிடைக்கப்பெற்றதாகவும், அப்பிரிவின் பொறியாளர் கடந்த 23.4.2022 அன்று online விண்ணப்பத்தில் ஆவணங்கள் பதிவேற்றம் செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டு விண்ணப்பத்தினை hold செய்யப்பட்டதாகவும், அதற்கு கடந்த 30.09.2022 வரையில் மனுதாரரிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கப் பெறவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேலும் திரு.கோ.வெங்கடேசன் அவர்களின் 01.10.2022 நாளிட்ட மனுவில் மேற்கூறிய காரணங்களை குறிப்பிட்டு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதாகவும், மேற்கண்ட வீட்டிற்கு புதிய மின் இணைப்பு வழங்க வேண்டி "மக்கள் வழிகாட்டி இயக்கம்" எண் 273A ஜோதியம்மாள் நகர் 2 வது தெரு, சைதாப்பேட்டை சென்னை–15 அலுவலகத்திலிருந்து முதலமைச்சர் தனிப்பிரிவு மனுவில் அளிக்கப்பட்ட மனு எண் 3232573/ நாள் 3/3/22 மீது கடந்த 22/3/22 அன்று பதில் அளிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 இருப்பினும் கடந்த 25.10.2022 வரை மனுதாரிடமிருந்து எவ்வித தகவலும் பெறாததாலும், விண்ணப்பம் பதிவு செய்து 30 நாட்கள் கடந்துள்ளதாலும் விண்ணபப்த்தினை ரத்து செய்ய பரிந்துரை செய்யப்பட்டு விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 25.10.2022 அன்று திரு. வெங்கடேசன் த.பெ கோவிந்தப்பன், எண். 125/1A, மலை தெரு ஆலப்பாக்கம் செங்கல்பட்டு அவர்கள் மேற்பார்வை பொறியாளர் / செங்கல்பட்டு அலுவலகத்தில் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மனு அளித்துள்ளதன் அடிப்படையில் ஊரகம்/தெற்கு/ செங்கல்பட்டு பிரிவிற்குட்பட்ட 125/1A .மலை தெரு ஆலப்பாக்கம் கிராமம் செங்கல்பட்டு என்ற விலாசத்தில் ஆய்வு மேற்கொண்டதில், மனுதாரரின் online விண்ணபத்துடன் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை கூர்ந்து ஆராய்ந்து பார்த்ததிலும் சில குறைபாடுகள் கண்டறியப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மனுதாதரர் மின் இணைப்பு கோரும் நெ.125/1A மலை தெரு, ஆலப்பாக்கம் கிராமம், செங்கல்பட்டு மாவட்டம் இடமானது அரசு புறம்போக்கு நிலம் என்று தெரியவருவதாகவும், குடிநீர் கட்டண ரசீது – பெயர்– கோ.வெங்கடேசன், த/பெ.கோவிந்தப்பன், மலை தெரு, ஆலப்பாக்கம், நாள் – குறிப்பிடப்படவில்லை, ரசீது எண்– குறிப்பிடப்படவில்லை மேலும் வீட்டின் எண் குறிப்பிடப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மனுதாரர் பதிவேற்றம் செய்துள்ள 14.09.1928 நாளிட்ட கிரையப்பத்திரத்தில் 1. திருவேங்கிட பிள்ளை 2. முருகப்பிள்ளை 3. கன்னியப்பிள்ளை மற்றும் 4 மைனர் கிருஷ்ணசாமி பிள்ளைக்கு கார்டியனும் தாயாருமான பெரியம்மாள் ஆகிய நால்வரும் திருமதி பாலாம்மாள், க/பெ. மாணிக்கம் பிள்ளை அவர்களுக்கு கிரையம் செய்துள்ளதாகவும், மேலும் திரு கோவிந்தன் (எ) கோவிந்தப்பன், த/பெ. திருவேங்கடப்பிள்ளை அவர்கள் 27.6.2007 அன்று இதற்குண்டான இறப்பு சான்று மற்றும் திரு.கோவிந்தன் (எ) கோவிந்தப்பன், த/பெ. திருவேங்கடப்பிள்ளை அவர்களின் வாரிசு சான்று – திருமதி கிருஷ்ணவேணி மனைவி மற்றும் திரு வெங்கடேசன் – மகன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், இந்த ஆவணங்கள் மேற்கொண்ட இடத்துடன் எவ்வித தொடர்புடையது என்று புலனாகவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 எனவே, மேற்கண்ட ஆவணங்கள் மனுதாரரின் வீட்டிற்குண்டான சரியான ஆவணங்களாக புலப்படாததாலும், மனுதாரரான திரு.வெங்கடேசன் அவர்கள் மின் இணைப்பு கோரியிருந்த இடமானது அரசு புறம்போக்கு நிலம் என்று கள ஆய்வில் தெரிய வந்ததாலும் TNERC Distribution Code 27(12) ன் படி உரிய துறை அலுவலரிடமிருந்து தடையில்லா சான்று பெற்று விண்ணப்பித்தால் புதிய மின் இணைப்பு வழங்க இயலும் என்ற கள ஆய்வு அறிக்கையில் தெரியவருவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் புதிய எண் 125, சி1 மலைத்தெரு, ஆலம்பாக்கம் கிராமம், செங்கல்பட்டு முகவரிக்கு மின் இணைப்பு கோரி விண்ணப்பித்த பதிவு எண் 200095150422314 நாள் 15.4.2022 என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்தார். மேலும் அவருடைய விண்ணப்பத்தின் மீது 21.4.2022 அன்று உதவி பொறியாளர் ஆய்வு செய்து 23.04.2022-இல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான காரணம் உரிய ஆவணங்கள் இல்லை என்ற விவரம் தனக்கு 17.05.2022 அன்று இணையதளத்தை

பார்வையிட்ட பின்பு தான் தெரியவந்ததாகவும், ஆனால் எந்த ஆவணங்கள் இணைக்கப்படவில்லை என்ற தகவல் தனக்கு தெரிவிக்கவில்லை என்று வாதிட்டார்.

7.3 மேலும், மேல்முறையீட்டாளர் அந்த காலகட்டத்தில் அவருக்கு உடல் நிலை சரியில்லை என்பதால் உடனே உதவி பொறியாளரை சந்திக்க வில்லை என்று தெரிவித்தார். எதிர்மனுதாரர் கேட்புரையில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு கோரும் முகவரிக்கான இடம் பற்றிய விண்ணப்பம் மின் இணைப்பு கோருவதற்கு முன்பே மக்கள் வழிகாட்டி இயக்கம், சைதாபேட்டை மூலம் முதல் அமைச்சர் தனி பிரிவில் இருந்து பெறப்பட்ட கடிதத்திற்கு உரிய பதிலாக 22.03.2022 அன்று மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் அரசு புறம்போக்கு நிலமாக இருப்பதால் உரிய துறை அலுவலகத்திலிருந்து மறுப்பின்மை சான்று பெற்று விண்ணப்பித்தால் மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டது என வாதிட்டார்.

7.4 மேலும், மேல்முறையீட்டாளர் 2018–இல் இதே முகவரிக்கு மின் இணைப்பு கேட்டு விண்ணப்பிக்கும் போது அது அரசு புறம்போக்கு நிலமாக இருப்பதால் உரிய அலுவலகத்திலிருந்து மறுப்பின்மை சான்று இணைக்கத் தவறிய காரணத்தினால் 29.05.2018 அன்று அவருடைய விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டது என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்தார்.

7.5 மேற்கூறிய மேல்முறையீட்டாளர் முறையீடு மற்றும் எதிர்மனுதாரர் இணைத்த ஆவணங்கள் மூலம் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நிலஉச்ச வரம்பு கையகப்படுத்தப்பட்ட இடத்தில் அரசு மேய்கால் புறம்போக்கு இடத்தில் வருவதாக ஆவணங்கள் மூலம் தெரிய வருகிறது. 2018–லிருந்தே முறையீட்டாளர் அதே முகவரிக்கு மின் இணைப்பு கேட்டு முறையிடுவதும் எதிர்மனுதாரர் உரிய அலுவலகத்திலிருந்து ஆவணங்கள் இணைக்கப்பட்டால் மின் இணைப்பு வழங்க இயலும் என்ற நிலைபாடு தொடர்ந்து இருப்பது தெரியவருகிறது. மேலும் இந்நிலையில் தமிழ்நாடு மின்பகிர்மான விதி 27(12)– ஐ ஆராய விரும்புகிறேன்.

*"xxx*
*xxx*

*புறம்போக்கு நிலங்கள் / அரசு நிலங்களில், தமிழ்நாடு அரசின் உரிய அலுவலரிடமிருந்து பெற்ற மறுப்பின்மைச் சான்றிதழை அளித்தால் மின்னிணைப்பு வழங்கப்படும்.*
*xxx*
*xxx"*

மேற்கண்ட விதியின்படி அரசு புறம்போக்கு மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் நிலஉச்ச வரம்பில் கையகப்படுத்தப்பட்ட இடம் என்பதால் தமிழ்நாடு மின்பகிர்மான விதி 27(12)-ன்படி புறம்போக்கு நிலங்கள் / அரசு நிலங்களில், தமிழ்நாடு அரசின் உரிய அலுவலரிடமிருந்து பெற்ற மறுப்பின்மைச் சான்றிதழை அளித்தால் மின்னிணைப்பு வழங்கப்படும் என அறிய முடிகிறது.

7.6 மேல்முறையீட்டாளர் 23.04.2022-இல் எந்த ஆவணம் இணைக்க வேண்டும் என்று தான் 30.09.2022 அன்று பதிவு தபால் மூலம் முறையிட்டு அதை எதிர்மனுதாரர் 01.10.2022-இல் பெறப்பட்டும் உரிய தகவலை தெரிவிக்கவில்லை என்று வாதிட்டார்.

7.7 எதிர்மனுதாரரோ, மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் 29.5.2018 அன்று உரிய மறுப்பின்மைச் சான்றிதழுக்கான ஆவணங்கள் உரிய அலுவலகத்திலிருந்து பெற்று இணைக்கப்படவில்லை என்பதால் அதே நிராகரிக்கப்பட்ட முகவரிக்கு 15.04.2022-இல் மின் இணைப்பு கோரி அண்ணா நகர் பிரிவு அலுவலகத்திற்கு விண்ணப்பித்த நிலையில் அது 20.04.2022 அன்று ஊரகம்/தெற்கு/செங்கல்பட்டு பிரிவில் கிடைக்கப்பட்டவுடன் 23.04.2022 அன்று விண்ணப்பம் உரிய ஆவணங்கள் இல்லாததால் நிறுத்தி வைக்கப்பட்டதென்றும் அதற்கான குறுஞ்செய்தி அவருக்கு அனுப்பப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் வாதிட்டார். மேல்முறையீட்டாளரும் கேட்புரையின்போது இதனை ஒப்புக் கொண்டார். மேலும், குறுஞ்செய்தி கிடைக்கபெற்ற பின்பு மேல்முறையீட்டாளர் தங்களை தொடர்பு கொள்ளவில்லை என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்தார்.

7.8 மேல்முறையீட்டாளர் தான் 17.05.2022-இல் இணையதளத்தில் பார்வையிட்ட போது தான் தன்னுடைய விண்ணப்பம் 23.04.2022-இல் நிறுத்தி வைக்கப்பட்டது தெரியவந்ததாகவும், அதற்கான விளக்கங்கள் கிடைக்காத நிலையில் 30.09.2022 அன்று எந்த வகை ஆவணம் இணைக்க வேண்டும் என்று முறையிட்ட பின்பும்

அதற்கான பதில் கிடைக்கவில்லை என்பதால் உரிய நிவாரணமும் மின் இணைப்பும் வழங்குமாறு முறையிட்டார்.

7.9 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதுரையில் உரிய அலுவலரிடமிருந்து மறுப்பின்மைச் சான்று மேல்முறையீட்டாளரால் 2018 காலகட்டத்திலிருந்தே பெற இயலாத நிலையில் எந்தவகை கூடுதல் ஆவணம் என்று புதியதாக வினவுவது மேல்முறையீட்டாளரின் கூற்றில் உண்மை இல்லை என தெரிவித்து, மேல்முறையீட்டாளரின் கூற்றை நிராகரிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

7.10 இந்த நிகழ்வில், மின்குறைதீர்ப்பாளரிடம் சேவை குறைபாடு என்ற முறையீடு சரியா என்று ஆராய விரும்புகிறேன். சேவை குறைபாடு என்பது சரியான முறையீடுகளுக்கு நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில் மட்டுமே உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்பது பொருந்தும். ஆனால் 2018–லிருந்தே மறுப்பின்மை சான்று பெற இயலாத நிலையில் 15.4.2022–இல் மீண்டும் பதிவு செய்யப்பட்ட மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்தில் சேவை குறைபாடு என்று மேல்முறையீட்டாளர் முறையிட்டுள்ளார். ஏற்கனவே 29.05.2018 அன்று நிராகரிக்கப்பட்ட மின் இணைப்பு கோரும் இடத்திற்கு மீண்டும் மறுப்பின்மை சான்று இல்லாமல் விண்ணப்பித்து மின் இணைப்பு கோருவதில் சேவை குறைபாடு இல்லை என நான் கருதவதால் மேல்முறையீட்டாளரின் அக்கோரிக்கை நிராகரிக்கப்படுகின்றது.

7.11 மேல்முறையீட்டாளர் கேட்புரையின் போது சொத்து ஆவணங்கள் அடிப்படையில்தான் மின் இணைப்பு கோருவதாக முறையிட்டார். ஆனால், ஏற்கனவே எதிர்மனுதாரரால் மின் இணைப்பு கோரிய இடம் உரிய மறுப்பின்மை சான்றிதழ் இல்லாத அரசு புறம்போக்கு மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் நிலஉச்ச வரம்பில் கையகப்படுத்தப்பட்ட இடம் என்ற அடிப்படையில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

7.12 மேலும், கேட்புரையின்போது இவ்வழக்கு தொடர்பாக கூடுதல் விவரங்கள் சமர்ப்பிக்குமாறு எதிர்மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதன்படி மேல்முறையீட்டாளர் திரு.கோ.வெங்கடேசன், த/பெ.கோவிந்தப்பன் அவர்கள் மின் இணைப்பு கோரி விண்ணப்பித்திருந்த இடத்தின் நில விவரங்களை, செங்கல்பட்டு வட்டாச்சியர் அவர்களிடம் கடிதம் வாயிலாக கோரியதற்கு, செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு

வட்டம், ஆலப்பாக்கம் கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர் அவர்களுடன், இளநிலை பொறியாளர்/இ&ப/ஊரகம்/தெற்கு/செங்கல்கட்டு அவர்கள் மேல்முறையீட்டாளரின் இடத்தினை 11.05.2023 அன்று கள ஆய்வு செய்யப்பட்ட ஆய்வின் படி, மேற்கண்ட இடமானது செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், ஆலப்பாக்கம் கிராம புல எண் 87/2A என்றும், அப்புலத்தின் பட்டாவானது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமானது என்றும் 12.05.2023 கடிதம் வாயிலாக வட்டாச்சியர், செங்கல்பட்டு அவர்கள் தெரிவித்துள்ளார்.

7.13 தற்சமயம் மேல்முறையீட்டாளர் அதே முகவரிக்கு தடையில்லா சான்று இல்லாமல் மின் இணைப்பு கோருவதாலும் அந்த இடம் அரசு புறம்போக்கு மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் நிலஉச்ச வரம்பில் கையகப்படுத்தப்பட்ட இடம் என்பது எதிர்மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் தெரியவருவதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

7.14 மேலும், மேல்முறையீட்டாளர் தன்னுடைய முறையீட்டை தமிழில் விண்ணப்பித்த போது மின் நுகர்வோர் குறைதீர்மன்றம் செங்கல்பட்டு, தன்னுடைய ஆணையை ஆங்கிலத்தில் அனுப்புவது சரியில்லை என்றும், அதை தமிழில் வழங்க கேட்டுக் கொண்ட நிலையிலும் தற்சமயம் வரை வழங்கவில்லை என்றும் தனது வாதுரையில் தெரிவித்தார். மின் நுகர்வோர் குறைதீர்மன்றத்தின் இச்செயல் வருத்தமளிக்கிறது. எனவே மன்றத்தின் தீர்வை தமிழில் வழங்கவும் எதிர்வரும் காலங்களில் உரிய பதிலை நுகர்வோர் விண்ணப்பத்தின் (ஆங்கிலம்/தமிழ்) மொழியின் அடிப்படையில் ஆணை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## 8.0 <u>பகுப்பாய்வு:</u>

8.1 மின் நுகர்வோர் குறைதீர்மன்றம் செங்கல்பட்டு ஏற்கனவே பல கூர்நோக்கு ஆணைகள் வழங்கப்பட்ட நிலையிலும் அதை சரியாக கடைப்பிடிக்க தவறுவது மீண்டும் வருத்தத்துடன் பதிவு செய்யப்படுகிறது. ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட AP 10/2023, AP 54/2022 ஆணைகளில் உள்ள கூர்நோக்கு கருத்துகளை அதன் பார்வைக்கு கொண்டு வரப்படுகிறது. எனவே எதிர்வரும் காலங்களில் பேசும் உரைநடையில் ஆணை (speaking order) வழங்க மீண்டும் அறிவுறுத்தப்படுகிறது.

9.0 **முடிவுரை:**

9.1 மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு கோரும் முகவரி அரசு புறம்போக்கு மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் நிலஉச்ச வரம்பில் கையகப்படுத்தப்பட்ட இடம் என்பதால் தமிழ்நாடு மின்பகிர்மான விதி 27(12)–ன்படி புறம்போக்கு நிலங்கள் / அரசு நிலங்களில், தமிழ்நாடு அரசின் உரிய அலுவலரிடமிருந்து பெற்ற மறுப்பின்மைச் சான்றிதழை அளித்தால் மின்னிணைப்பு வழங்கப்படும் என்று நிலையில் அவரது கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

9.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு என் 19/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

"நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

பெறுநர்

1. திரு. கோ. வெங்கடேசன், – By RPAD
புதிய எண்.125 சி/1, மலைத்தெரு,
ஆலப்பாக்கம் கிராமம், செங்கல்பட்டு – 603 002.

2. உதவி மின் பொறியாளர்/செங்கல்பட்டு/தெற்கு,
செங்கல்பட்டு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
B–39, அலகேசன் நகர், செங்கல்பட்டு – 603 002.

3. செயற்பொறியாளர்/ இ&ப/ செங்கல்பட்டு,
செங்கல்பட்டு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண் 130, GST ரோடு, செங்கல்பட்டு – 603 001.

4. மேற்பார்வை பொறியாளர், – By Email
செங்கற்பட்டு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.130, GST ரோடு, செங்கற்பட்டு – 603 001.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.